தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான
இலகுவழி மாதிரிப் பரீட்சை - 49


ஆசிரியர் : P.அம்பிகைபாகன்



வினாத்தாள் - 1

45 நிமிடங்கள்

(அரச பரீட்சையைத் தழுவிய மாதிரிப் பரீட்சை)

♦ **1ஆம் 2ஆம் வினாக்களில் பொருத்தமற்ற உருவைத் தெரிவு செய்க.**

01.
1) 
2) 
3) 


02.
1) 
2) 
3) 


♦ **03ஆம் 04 ஆம் வினாக்களில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**


03. நோய்க்கு மருந்து போன்று பசிக்கு _____
1) சோறு 2) உணவு 3) தேநீர்

04. செவ்வந்தி மலர் போன்று முள்ளங்கி _____
1) கிழங்கு 2) தாவரம் 3) காய்

♦ **05 ஆம் 06 ஆம் வினாக்களுக்குப் பின்வரும் அடைப்பில் தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி விடையைத் தெரிவு செய்க.**







05.  எதற்குச் சமம்

1) 3kg 600g 2) 6kg 600g 3) 9kg 600g

06. பின்வருவனவற்றில் மிகவும் சரியான தொடர்பு யாது?

1) 

2) 

3) 


♦ **வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**


07.

2	⇨	6	◎	9
4	◎	7	△	49
6	△	36	⇨	.....

1) 39 2) 40 3) 44

www.lkedu.lk

08.  = 35

 = 19

 = ... ? 1) 8 2) 4 3) 12

♦ **பாடல்களை வாசித்த 09ஆம் 10ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.**

தோண்டத் தோண்ட
கேணியில் நீர் ஊறும்
கற்கக் கற்க
மூளையில் அறிவு .....

09. வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்.
1) ஊறும் 2) பீறும் 3) பெருகும்

அறிவு இருந்தால்
எல்லாம் உண்டாம்
அறிவு இல்லாவிட்டால்
உள்ளதும் .....

10. வெற்றிடத்திற்குப் பொருத்தமற்ற சொல்.
1) தொல்லையாம் 2) இல்லையாம் 3) உண்டாம்

♦ **கீழே தரப்பட்டுள்ள மூன்று படிமுறைகளின் கீழ் மாதிரிப் பரீட்சை ஒன்று நடைபெற்றது.**

படிமுறை	பரீட்சை	காலம்
1	வினாத்தாள் - 01	30 நிமிடங்கள்
2	இடைவேளை	படிமுறை ஒன்றின் அரை மடங்கு
3	வினாத்தாள் - 02	படிமுறை ஒன்றின் மூன்று மடங்கு

11. மாதிரிப் பரீட்சை காலை 9.30 க்கு ஆரம்பித்திருந்தால் எத்தனை மணிக்கு முடிவுற்றிருக்கும்.
1) 10.30 2) 11.30 3) 11.45

♦ **குமாரின் அண்ணாவிற்கு மூன்று ஆண் சகோதரர்களும் மூன்று பெண் சகோதரிகளும் உள்ளனர்.**

12. குமாருக்கு எத்தனை சகோதரர்கள் உள்ளனர்?
1) 3 2) 4 3) 5

13. குமாரின் தங்கைக்கு எத்தனை சகோதரர்கள் உள்ளனர்?
1) 3 2) 4 3) 5

♦ **பின்வரும் கோவையைப் பார்க்க.**

3 ☆ 4 = 3 ⊞ 9

14. ☆ என்ற குறியீடானது எதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது?
1) கூட்டல் 2) கழித்தல் 3) பெருக்கல்

15. ⊞ என்ற குறியீடானது எதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது?
1) கூட்டல் 2) கழித்தல் 3) பெருக்கல்

16. ரூபா 100 இன் அரை பங்குடன் ரூபா 40 இன் காற்பங்கை கூட்டினால் வரும் தொகை யாது?
1) ரூபா 50 2) ரூபா 60 3) ரூபா 70

www.ikedu.lk

♦ **17 ஆம் 18ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள பழமொழிகளின் கருத்தை நன்கு விபரிக்காத விடையைத் தெரிவு செய்க.**

17. நிழலின் அருமை வெயிலில் தெரியும்
    1) நிழல் குளிரும் வெயில் சுடும்.
    2) இலகுவாக கிடைத்த பொருளின் சிறப்பு அது இல்லாதபோது தெரியும்.
    3) தாய் தந்தையரின் அருமை அவர்களை இழந்தால் தெரியும்.


18. இமைக்குற்றம் கண்ணுக்குத் தெரியாது.
    1) தன் முதுகுப் புண்ணை தான் பார்க்க முடியாது.
    2) எம்மிடம் உள்ள குறைகளை நாம் அறிய மாட்டோம்.
    3) இமை மூடித்திறப்பது கண்ணுக்குத் தான் வேதனையாகும்.

♦ **19 ஆம் 20 ஆம் வினாக்களின் தடித்த எழுத்திலான சொற்களுக்கு சொற்பொருள் விளக்கத்தைத் தெரிவு செய்க.**

19. பாடசாலையில் தரப்பட்ட பயிற்சிகளைச் செய்வதற்கு உதவி செய்யாத அண்ணனை தங்கை **கடிந்து** கொண்டாள்.
    1) இரக்கம் 2) தூற்றுதல் 3) போற்றுதல்


20. குகன் நின்ற **நிரையில்** அவனுக்கு முன்னால் அவன் தங்கை நின்றாள்.
    1) பாரம் 2) வரிசை 3) முன்நோக்கி

21. பின்வரும் கோட்டுப்படத்தில் உள்ள கோலத்துக்கு ஏற்ப வெற்று அடைப்புக்குப் பொருத்தமான எண்ணைத் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்க.




1) 908 2) 906 3) 609

A,B, C **எனும் நண்பர்கள் விளையாட்டு மைதானத்துக்கு காலையில் வருகை தந்த நேரங்களை முதல் வரிசைக் கடிகாரங்களும் மாலையில் வெளியேறியதை இரண்டாம் வரிசைக் கடிகாரங்களும் காட்டுகின்றன.**



A B C



A B C

22. அதிக நேரம் மைதானத்தில் இருந்தவர் யார்?
    1) A 2) B 3) C

23. குறைந்த நேரம் மைதானத்தில் இருந்தவர் யார்?
    1) A 2) B 3) C

24. காலையில் இறுதியாக வந்து மாலையில் இறுதியாகச் சென்றவர் யார்?
    1) A 2) B 3) C

www.ikedu.lk

♦ **பின்வரும் தகவல்களைக் கொண்டு 25ஆம் 26ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.**

கடலை வடை	1
உழுந்து வடை	1
விலை ரூபா	66.00

கடலை வடை	3
உழுந்து வடை	2
விலை ரூபா	162.00

25. கடலை வடை ஒன்றின் விலை யாது?
1) ரூபா 30.00 2) ரூபா 33.00 3) ரூபா 36.00

26. உழுந்து வடை ஒன்றின் விலை யாது?
1) ரூபா 30.00 2) ரூபா 33.00 3) ரூபா 36.00

பாலன், மயூரன், இராமன், நாதன் ஆகிய நான்கு நண்பர்களும் மாபிள்கள் சேகரிப்பவராவார்.
- பாலனிடம் மூன்றாவது ஒற்றை எண் எண்ணிக்கை அளவு மாபிள்களும்,
- மயூரனிடம் மூன்றாவது இரட்டை எண் எண்ணிக்கை அளவு மாபிள்களும்,
- இராமனிடம் மூன்றாவது முக்கோண எண் எண்ணிக்கை அளவு மாபிள்களும்,
- நாதனிடம் மூன்றாவது சதுர எண் எண்ணிக்கை அளவு மாபிள்களும் உள்ளன.

27. அதிக எண்ணிக்கையான மாபிள்கள் வைத்திருப்பவர் யார்?
1) பாலன் 2) மயூரன் 3) நாதன்

28. குறைந்த எண்ணிக்கையான மாபிள்கள் வைத்திருப்பவர் யார்?
1) பாலன் 2) இராமன் 3) நாதன்

29. சமமான எண்ணிக்கையான மாபிள்கள் வைத்திருப்பவர்கள் யாவர்?
1) மயூரன், இராமன் 2) பாலன், நாதன் 3) மயூரன், நாதன்


30. ர், ப, த, ய, அ, வ, வி, ட், க், ச், டை, தி, ப, ம, இ, மு, ம், சா,


அடைப்பினுள் தரப்பட்டுள்ளள எழுத்துக்கள் மூன்றினைப் பொருத்தமான முறையில் ஒழுங்குபடுத்தி பறவையிடமிருந்து பெறப்படும் பயனுள்ள உணவு ஒன்று எழுதுக. _____


31. அடைப்பினுள் உள்ள நான்கு எழுத்துக்களைப் பயன்படுத்தி பாடசாலையைக் கொண்டு நடாத்துபவர் ஒருவரின் பெயரை எழுதுக. _____

32. அடைப்பினுள் உள்ள ஐந்து எழுத்துக்களைப் பயன்படுத்தி மக்களின் உணவுத் தேவைகளை நிறைவு செய்யும் தொழிலின் பெயரை எழுதுக. _____


♦ **அம்புக் கோடுகள் இறுதியில் காட்டும் திசைகளை எழுதுக.**

33.  _____


34.  _____

35.  _____


♦ **கடிகார முகங்களின் வினாவில் அடியில் கேட்கப்பட்ட கோணங்களுக்கு ஏற்ற மணிமுள் (சிறியமுள்) மாத்திரம் கீறுக.**



36. கூர்ங்கோணம்





37. விரிகோணம்



38. செங்கோணம்

♦ **விடுபட்ட பகுதியை தெரிவு செய்க.**

39. 

40. 

www.ikedu.lk

விடைகள்

மாதிரிப் பரீட்சை 49 இலிருந்து 50 வரை

மாதிரிப்பரீட்சை - 49

01) 3 02) 2 03) 2 04) 1 05) 3 06) 1 07) 2 08)△எனக் கருதுக.

09) 3 10) 3 11) 3 12) 1 13) 2 14) 3 15) 1 16) 2 17) 1

18) 3 19) 2 20) 2 21) 2 22) 1 23) 3 24) 2 (மணி முள் கீழாகவும்)

25) 1 26) 3 27) 3 28) 1 29) 1 30) முட்டை 31) அதிபர்

32) விவசாயம் 33) தெற்கு 34) வடக்கு 35) கிழக்கு

36) 2யை 37) 4யை 38) 3யை 39) 2 40) 2

www.lkedu.lk